ஏணி

பங்கி அடித்தவன் நடப்பதுபோல் தம் லயிப்பில் திரும்பி வந்து கொண்டிருந்தவர், வீட்டு வாசல் ஏறி நிலைவாசலண்டை வந்ததும் ஏதோ நினைப்பு வந்தவராய்த் தயங்கி, சுழன்று திண்ணையில் உட்கார்ந்தார். தாமாகக் கைகள் முழங்காலைக் கட்டிக் கொண்டன. கண்கள் குறிப்பின்றி, சூழ் வெளியைத் துழாவின ; திடீரென்று எதிரே எழுந்த ஊர்க் குன்றின்மேல் மோதி மடங்கின.

அந்தத் தடை அவரை எப்படியோ ஆக்கிவிட்டது. அதே சமயம் பேரிரைச்சலுடன் அலைகள் புரண்டோடி வந்து காலடியில் விசிறிப் பரவின.

காலையில் ஒன்பது மணிக்குப் போனவர் பன்னிரண்டு மணியாகியும் வரவில்லையே என்று வீட்டார்கள் துடித்துப் போயிருக்க வேண்டும். திரும்பி வந்தது பெரிய ஆறுதல் தருவதைக் காட்டுவதற்காகத் தம்மை எதிர்கொண்டு அழைக்கக்கூடும் என்ற நினைப்பும் கூட எழுந்து பரவிக் கொண்டிருந்தது.

வீட்டுக்குள்ளிருந்து யாரும் வந்து எட்டிக்கூடப் பார்க்கவில்லை. ஆமாம், ஆற்று வெள்ளத்தில் மூங்கில் கொழுத்தாடை அமுந்திக் கிடக்கிறது. தண்ணீர் வடிந்தால்-வடியும் நம்பிக்கை ஏற்பட்டால்கூட-வெடுக்கென்று நிமிர்கிறது. 'வீட்டுக்கு வருகிறவன் உள்ளே வராமலா போகிறான் ? பரிவு அநாவசியம்' என்று தோன்றியிருக்கலாம்.

இந்த நினைப்பு மறைவதற்குள் பிரம்மாண்டமான மற்றோர் அலை புரண்டு வந்தது. வருகிற அலையைவிடத் திரும்பிப் போகும் அலை அபாயகரமானது. ஆளை இழுத்துக் கொண்டு போய்விடுமே என்று தோன்றிற்று. திண்ணையில் நகர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

அவர் நினைப்பை மறுப்பதுபோல், நிலைவாசலுக்குள் இருந்தபடியே பாட்டி கழுத்தை நீட்டி அவரைப் பார்த்தாள். கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்பினால் வீட்டில் உட்கார்ந்துவிட்டுத்தான் பிறகு கால் கை கழுவிக்கொள்ள வேண்டும் என்ற சம்பிரதாயம் நினைவுக்கு வந்தது. ஆனால் அதற்காக உட்கார்ந்திருப்பவரைப்போல் தோன்றவில்லை. முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த மாதிரியைப் பார்த்தால் நாள் முழுவதும் அப்படியே உட்கார்ந்திருப்பார் போலப் பட்டது. கூப்பிட வாயெடுத்தவள் மௌனமாகிவிட்டாள். பேரன் பாட்டியைப் பார்த்தானே ஒழிய மனம் அலைகளின் திகிலில் குழம்பிக் கிடந்தது. பேரன், இறந்த பெண் வயிற்றுப் பிள்ளை, திருமணம் செய்து கொள்ள மறுத்தபொழுதே அவனை அரைப் பைத்தியம் என்று நினைத்துவிட்டாள். அதற்கு ஏற்றாற் போல் பின்னர் அவன் க்ஷேத்திரங்களுக்குப் போவதும் வருவதும், இங்கிருந்தால் சிவன் கோயிலுக்குப் போவதும் வருவதும், தகப்பனார்வீட்டுக்கே போகாமல் இருப்பதும் அவள் முடிவை ஊர்ஜிதப்படுத்திவிட்டன. இருந்தாலும் உடலைப் பேண வேண்டிய பரிவு மட்டும் அவளை விட்டுக் கழலவில்லை. அந்த உந்துதலில்தான் வந்து பார்த்தாள். ஊமையாய், சலனமின்றி இருந்ததைக் கண்டதும் அந்தப் பரிவு உள்ளுக்கு இழுத்துக் கொண்டுவிட்டது. ஆகையால் தலையையும் உள்ளுக்கு இழுத்துக்கொண்டு மௌனமாய்ப் போய்விட்டாள்.

மற்றோர் அலை வந்துகொண்டிருந்தது. ஆனால் நகர வேண்டுமென்று தோன்றவில்லை. அர்ச்சகர் மனத்தில்

முளேத்தார். வேண்டுமென்ரு தன்னேக் கோவிலில் வைத்துப் பூட்டிக்கொண்டு போயிருப்பார்? தனக்கும் அவருக்கும் அப்படி எதுவும் மனஸ்தாபம் இல்லேயே! தினம் தவருமல் ஒருவன் கோயிலுக்கு வருவதையே குற்றமென்று நினேக்கிருரா? அர்ச்சனே செய்வதில்லே. கர்ப்பூரத் தட்டில் காசு போடுவதில்லே. நிழல் மாதிரி கோயிலுக்கு வந்து விட்டு வந்துவிட்டுப் போகிருன் என்ற வருத்தமா? இருக்காது இருக்காதென்று ஓர் அலே கூறிக்கொண்டு புரண்டு வருவதுபோல் இருந்தது.

பன்னிரண்டு மணி வெயிலே அடைத்துக் கொண்டு கறுப்பாகத் தெருவில் ஓர் உருவம் எதிரே தட்டென நின்று பேசியதும் அவர் மனம் உலுக்கி விழுந்தது.

"என்னங்க, அப்புறம் எப்படி வந்தீர்கள்?"

அவர் பதில் சொல்லவில்லே. வெறிக்க ஆளேப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"உங்களுக்கு நியாயமாக என் பேரில் கோபம் இருக்கத்தான் இருக்கும். ஆனல் பாருங்கள், எனக்கு அவசரம். கடைக்குப் போய்க்கொண்டிருந்தேன். சாப்பிட இலே இல்லே. நின்று உங்களே இறக்க வழி செய்து கொண்டிருந்தால் கடைக்காரன் கடையைக் கட்டிக்கொண்டு போய்விடுவான். இதென்ன, டவுனு? அதுதான் போய்விட்டுக் கையோடு வருகிறேன். நீங்களே வந்துவிட்டீர்கள். எனக்கு வேலே மிச்சமாகப் போயிற்று. வித்தியாசமாக நினேத்துக் கொள்ளாதீர்கள்."

அதற்கும் அவர் வாயைத் திறக்கவும் இல்லே; முழங்காலேக் கட்டின கையைப் பிரிக்கவும் இல்லே. வேலே மிச்சமென்று சொன்னவரும் வீடு நோக்கிக் கடைத் தெருப் பக்கமாகப் போய்விட்டார்.

அவர் மனம் அதைக் குறித்துக்கொண்டது. கருணே ஒன்றும் துளும்பும் ஆசாமி அல்ல இவர்.

உதவி செய்திருந்தால் கிடைக்க வேண்டிய பெருமையைத் தட்டிப் பறித்துச் சென்ற திருடன் யார் என்று அறிய அலையும் போலீஸ் தன்மை வந்துவிட்டுப் போகிறது. இருந்தாலும் அவரவர்களுடைய ஜோலி அவரவர்களுக்கு என்று அவர் மனம் குடைந்து மூழ்கிச் சமாதானம் கண்டு கொண்டிருந்தது.

கடலிலிருந்து செல்லும் கால்வாய் போல் ஒரு நினைப்பு ஓடியது. 'இதோ இந்தக் குன்றின் பாறையிலிருந்து சிவலிங்கத்தைச் செதுக்கி இருப்பார்களா? கல் வேலைக்கு லாயக்கா இருந்தால்—இருக்கலாம்...லாயக்கு...அர்ச்சகர் வேலைக்கு லாயக்கா? இவரைவிட நல்ல அர்ச்சகர் கிடைப்பாரா? பெரிய கோயிலாக இருந்தால் போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். கோடி வீட்டு மிராசுதார் தயவில் நடக்கும் கோயிலுக்கு இந்த அர்ச்சகர் ஓர் அதிருஷ்டம். பாவம், வயிற்றுக் கொடுமை! காலையும் மாலையும் சைக்கிளில் வந்து பூஜை செய்துவிட்டுத் திரும்பிப் போகிறார். நைவேத்தியத்தை எடுத்துக்கொண்டு சைக்கிளில் ஊருக்குப் போய், சாயங்காலம் நாலு மணிக்குத் திரும்பி வருகிறார். சாயங்காலம் கொஞ்ச நேரம்கூட இருக்கிறார். நியாயம். நாலு பேர் வருகிற சமயம். நாலுக்கு இரண்டு பழுதில்லை. பத்துக்கு ஐந்து காயில்லை.''

அன்று காலை அவர் கோயிலுக்குப் போனபோது ஐந்து கிளை தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. குறுக்கும் நெடுக்குமாகப் பறந்த வௌவால்களைத் தவிர, தேசிகர் வீட்டு ஆச்சியும் அவரும் மட்டுமே கோயிலில் இருந்தனர். விபூதிப் பிரசாதம் வாங்கிக்கொண்டு ஆச்சி வீட்டுக்குக் கிளம்பிவிட்டாள். அவர் பிரதட்சிணம் செய்யப் போய் விட்டார்.

பிராகாரத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி விக்கிரகத்தின் மௌன வனப்பை மீறி யாரும் அடி வைக்க முடியாது.

அவர் அங்கே சற்று உட்கார்ந்து கண்ணை ஒரு நிமிஷம் மூடினார்.

நிமிஷம் என்று மனத்துக்குப் படுவதற்கும் கடிகாரம் காட்டுவதற்கும் பெரிய வித்தியாசம் உண்டு என்பது அவருக்குப் பிறகுதான் தெரிந்தது. அந்த நிமிஷத்துக்குப் பிறகு கோபுரவாசலண்டை வந்தபோதுதான் கோயிலைப் பூட்டிக்கொண்டு அர்ச்சகர் போய்விட்டது தெரிந்தது. மனத்துக்கு நிமிஷம் போலிருந்தாலும் மணி பதினொன்று ஆகிவிட்டது.

அர்ச்சகர் மீது குற்றம் சாட்ட முடியாது. பாக்கி ஊர்க் கோயில்களையும் பார்த்துக் கொண்டு ஊருக்குப் போய் விட்டு மாலை திரும்பும் நியாயமான அவசரம். அவர் பேரில் பிசகில்லை. அதற்காகச் சாயங்காலம் வரையில் உள்ளேயே இருக்க முடியுமா? கோயிலுக்கு வந்து விட்டு அதை ஜெயி லாக மாற்ற இடம் கொடுக்கக் கூடாது என்ற வேதனை அவருக்கு உண்டாயிற்று.

சுற்று முற்றும் பார்த்தார். கோயில் திருப்பணிக் கும்பாபிஷேகத்துக்காகக் கட்டிய சாரம் தென்பட்டது. சாரத்து மூங்கிலும் படிகளும் வெயிலில் அடிபட்டு, சோகையாய் இளித்துக் கொண்டிருந்தன. சாரக் கயிறுகளோ வெயிலிலும் மழையிலும் அடிபட்டு ஊதிப் போய், இங்கும் அங்கும் அறுந்து தொங்கிக்கொண் டிருந்தன. தப்ப வேண்டுமென்ற வேகம், இந்தச் சந்தேகங் களை எல்லாம் முளையிலே கிள்ளிவிட்டது. வேகம் அவரை உந்திற்று. சாரத்து மேல் ஏறிக் கோபுரத்து ஆளோடி விளிம்புக்கு வந்துவிட்டார்.

சாரம் கண்ணில் படாமல் உள்ளே இருந்த நிலைக்கும் இப்பொழுதைய நிலைக்கும் பெரிய வித்தியாசம். அந்த வேதனையிலிருந்து விடுதலை கிடைத்துவிட்டது. ஆனால் புது வேதனை முளைத்தது. கீழே இறங்க வேண்டுமே!

ஊர் எல்லையிலுள்ள குன்று தெரிந்தது. கறுப்பாகத் தெரிந்த குன்றின்மேல் மேகங்கள் சென்று கொண்டிருந்த தனால் அந்த நிழல்கள் எதையோ திரை தள்ளிக் காட்டுவன போல் இருந்தன.

கீழே ரஸ்தா போய்க்கொண்டிருந்தது. நல்ல பதினென்றரை மணி வெயில். அவர் பார்த்த நேரத்தில் தெரு வெறிச்சென்று ஓடிக்கொண் டிருந்ததாகவே தோன்றிற்று. ஆனால் வழி தவறிய மேகம் போல் ரஸ்தாவில் ஒரு கிழவர் கோயிலின் நிழலை நெருங்கிக் கொண்டிருந்தார்.

"தாத்தா, தாத்தா !"

அவருடைய காதுக்குக் கூப்பிட்டது எட்டவில்லையோ என்று கைதட்டிக் கூப்பிட்டுப் பார்த்தார். ஊஹூம்! அவருக்குச் சண்டிகேசுவரர் மாதிரி காது செவிடோ என்னவோ ? நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை ; காற்றடித்த மேகம் போல் போய்விட்டார்.

அடுத்தாற்போல் வந்தவர்களைக் கண்டதும் அவருக்கு நம்பிக்கை பிறந்தது. நடுத்தர வயதினர்கள். கையைத் தட்டிக் கூப்பிட்டார். நம்பிக்கை வீண்போகவில்லை. இருவரும் நிமிர்ந்து பார்த்தனர். இருந்த நிலையிலிருந்து ஜாடை, பேச்சு எல்லாவற்றையும் கொட்டித் தம் நிலையை உணர்த்தி விட்டார். ஆனால் காரியம் பழுக்கவில்லை. ஒருவர் ஏதோ ஜாடை காட்டியது போலத் தோன்றிற்று. மறு நிமிஷம் அவர்கள் போய்விட்டார்கள். தம்மைப் பைத்தியம் என்று சொல்லியிருக்கக் கூடும் என்று பட்டது.

அதைப்பற்றி யோசிக்க நேரம் இல்லை. அதற்குள் மூன்று நான்கு சிறுவர்கள் வந்துகொண்டிருந்தனர். நேரடியாக அவர்களால் உதவி செய்ய முடியாவிட்டாலும் உதவிக்கு வழி செய்வார்கள் என்று நினைத்துப் பழையபடி கையைக் காலை ஆட்டிக் கூச்சலிட்டுப் பார்த்தார்.

டையன்கள் அவர் செய்ததை எல்லாம் அப்படியே தாங்களும் செய்தனர். கிண்டல் செய்துவிட்டு அவர்களும் போய்விட்டார்கள்.

இந்த நிலையில் அவமானம் வெடித்துப் பாய்ந்து உடலை ஆட்டிக்கொண்டிருந்தது. கோயிலுக்குள்ளே இருந்திருந்தால் இவ்வளவு அவமானத்துக்கு இடம் ஏற்பட்டிருக்காது. இப்பொழுதோ போவோர் வருவோர் உதவியை நாடி அலட்சியத்தையும் பைத்தியப்பட்டத்தையும் வாரிக் கட்டிக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. தாம் முட்டாள், பைத்தியம் என்று கோபுரத்திலிருந்து கூறுவதுபோல் செய்துவிட்டுப் பிறரை நோவது நியாயமா என்ற எண்ணம் வேறு தோன்றிக் கொண்டிருந்தது.

அதற்கடுத்தாற்போல் வந்தவர் கதையும் இதுவே தான். ஆனால் அவர் அதற்கு இப்பொழுது வந்து விளக்கம் தருவதுபோல் பாவனை செய்துவிட்டுப் போகிறார். திண்ணையில் உட்கார்ந்து முழங்கால்களைக் கட்டிக்கொண்டு இதை பற்றி எல்லாம் இப்பொழுது நினைக்கும் பொழுது தமாஷாக இருந்தது. அவரவர்களுக்கு அவரவர்கள் காரியம் என்பது இயற்கை நியதி. குற்றச்சாட்டு அன்று. ஆனால் அதை மறைத்துக் கொண்டு பல முகமூடிகள் தெரிகின்றன என்று நினைத்தபொழுது ஏனோ தமக்குத் தாமே சிரித்துக் கொண்டார்.

"என்ன, மாணிக்கம் மாமா ?" என்ற வார்த்தைகள் சிரிப்பைக் கத்தரித்தன. குரல் கொடுத்தவர், வீட்டுக்குள்ளிருந்து வந்த அவர் மாமா பிள்ளை—கிராமக் கர்ணம்.

"வீட்டுக்குள்ளேயா இருந்தாய் ?"

"ஆமாம். நேரம் கழித்து வந்தீர்களே, உள்ளே வரவில்லையே என்று பார்க்க வந்தேன். ஏதோ சர்க்கார்க் கணக்கொன்று அவசரம். எழுதிக் கொண்டிருந்தேன்.

இல்லாவிட்டால் அப்போதே வந்திருப்பேன். ஏன் இந்தனை நேரம்? சாப்பிடாமல் திண்ணையிலே ஆயாசமாய் உட்கார்ந்து விட்டீர்களே?"

"ஆயாசமில்லை—அதிசயம்."

"அப்படி என்ன அதிசயம்!"

"அது ஒரு கதை. சொல்கிறேன்—சாப்பிடும்போது."

மாணிக்கம் மாமா சிரித்துக்கொண்டே முழங்கால் கட்டை அவிழ்த்துக் கொண்டு எழுந்து மாமா பிள்ளையுடன் நிலைவாசலுக்குள் நுழைந்தார்.

"என்ன கர்ணம் ஸார்?" என்ற குரல் இருவரையும் இழுத்து நிறுத்திற்று. கர்ணம் தெருப்பக்கம் திரும்பினார். என்ன பயமோ, மாணிக்கம் மாமா ஒருக்களித்திருந்த முகத்தைத் தெருப்பக்கம் திருப்பவில்லை.

"என்னங்க?"

"இதோ ஊருக்குப் போகிறோம். சொல்லிக் கொண்டு போகலாமென்று வந்தேன்."

"கி. மு. எங்கே?"

"அவர் அப்படியே வீட்டுக்குப் போய்விட்டார்."

"வான்?"

"ஊர்க் கோடியிலே நிறுத்தி வைக்கச் சொல்லிவிட்டு வந்தேன். அந்தத் தெருவிலே ஒருத்தரைப் பார்க்க வந்தேன். அப்படியே உங்களிடமும் ஒரு வார்த்தை சொல்லிக் கொண்டு போகலாமென்று வந்தேன்."

"வந்த காரியம் ஆயிற்று?"

"நீங்கள் ஏன் வரவில்லை?"

" அதுதான் கி. மு. வந்தார்களே. எல்லாரும் ஒரே அழுகையாக அழுவானேன் என்று நான் கணக்கைக் கட்டி அழுதுகொண்டிருந்தேன்.''

" வந்த வேலை ஆகிவிட்டது. சொல்லாமல் கொள்ளாமல் இன்னொரு வேலை கிடைத்தது. அதையும் செய்து விட்டோம்; பெரிய அதிசயம். தமாஷ்."

அதிசயம் என்ற சொல்லைக் கேட்டு மாணிக்கம் மாமா தெருப்புறமாகத் தம்மை அறியாமலே திரும்பினார்.

" இவர் இங்கேயா இருக்கிறார் ?"

" இவரை உங்களுக்குத் தெரியுமா ?"

" கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் தெரிந்து கொண்டேன்."

" எப்படி ?"

" அது ஒரு தமாஷ். சொல்லாமலே ஓடி வந்து விட்டார்."

" என்ன தமாஷ் ?"

" எனக்கு நேரமாகிறது. அவரையே கேளுங்கள்,; சொல்வார்."

வந்தவர் வணக்கம் என்று சொல்லிக்கொண்டு போய் விட்டார். மாணிக்கம் மாமாவின் முகம் மரக்கட்டை போல இருந்தது.

" என்ன மாமா, இவர் சொல்கிறார் ?"

" சாப்பிடும்போது சொல்கிறேன்."

மாணிக்கம் மாமா வீட்டுக்குள் நுழைந்து கிணற்றண்டை சென்று செம்பில் நீரை மொண்டு நிமிர்ந்து பார்த்தார். மாமன் பிள்ளையும் செம்பில் ஜலம் எடுத்துக்

கைகால் அலம்பிக் கொண்டிருந்தான். மாமா நிமிர்ந்து பார்த்தபொழுது எதிரே குன்று தெரிந்தது. குன்றின்மேல் மேகத்து நிழல் விழுவதும் விலகுவதுமாக இருந்தது.

கை காலை அலம்ப ஆரம்பித்த மாணிக்கம் மாமா திடீரென்று, "தமாஷ் என்ன தெரியுமா?" என்று ஆரம்பித்தார்.

"காலையில் கோயிலுக்குப் போனேனா? குருக்கள் என்னை உள்ளே வைத்துப் பூட்டிக் கொண்டு போய்விட்டார். அவர் பேரில் பிசகில்லை. நான் பிராகாரத்துக்குப் போனது அவருக்குத் தெரியாது. பாக்கி ஊர்க் கோயில்களுக்குப் போகிற அவசரம். தட்சிணாமூர்த்தி சந்நிதியில் ஒரு நிமிஷம் உட்கார்ந்துவிட்டு வந்து பார்க்கிறபோது அவர் பூட்டிக்கொண்டு போய்விட்டார் என்று தெரிந்தது. அவர் திரும்பிவரும் வரையில் காத்திருக்கவாவது என்று கும்பாபிஷேகச் சாரத்து வழியாக ஏறி, கோபுர ஆளோடி முகப்புக்கு வந்தேன். தெருவிலே போகிறவர்களைக் கெஞ்சிக் கூத்தாடினேன். அவரவர்களுக்கு அவரவர் வேலை, அவசரம். ஒருத்தரும் ஏனென்று கேட்கவில்லை. அவமானம் தாங்கவில்லை. உயிருக்குத் தடுமாறுகிற மூச்சு மாதிரி ஆகிவிட்டது. இப்போது வந்து போனாரே, அந்தப் புண்ணியவானும் அதே ரஸ்தாவிலே வந்தார். நம்பிக்கையை விடாமல் கையைத் தட்டி ஜாடை செய்தேன். அவர் புரிந்துகொண்டார். 'இரு, வருகிறேன்' என்று கையை அமர்த்திவிட்டுப் போய்த் திரும்பி வந்தார், தாராளமான மூச்சு மாதிரி. அவர் கூட மூன்று பேர் இரும்பு ஏணியோடு வந்தார்கள். கீழே இறங்கிவிட்டது போலவே எனக்குச் சந்தோஷம். நான் மேலே தவித்துக்கொண்டுஇருந்தபோது ஐந்து நிமிஷம் சேர்ந்தாற்போலத் தெருவிலே ஒருத்தனும் நிற்கவில்லை. இந்த ஏணியைக் கொண்டுவந்து சாத்துவதற்குள்ளே பார், இருபது முப்பது பேர் கூடிவிட்டார்கள். ஏணி பலாப்பழமா? கும்பலைப் பார்த்ததால் மண்டையை ஏதோ ஒரு பக்கம் பிளந்தது. இன்னொரு

பக்கம் மயக்கம். ஏணியைச் சாத்திவிட்டார்கள் என்று தெரிந்தது. கிடுகிடென்று இறங்கி ஒரே நழுவாய் நழுவி விட்டேன் நன்றி கெட்ட பயல் மாதிரி. இந்த மந்தையைப் பார்க்கப் பிடிக்கவில்லை. அவர் யார்?"

தம்பியின் கன்னத்துத் தசைகள் நகர்ந்தன. சிரிப்பு, கேலி, துயரம் என்ற முக்கூட்டில் தசைகள் நின்றன.

"அவரா? நெருப்பணைக்கும் கோஷ்டி."

"இங்கே எங்கே வந்தார்?"

"கோடிக் குப்பத்திலே தீப்பிடித்ததற்கு வந்தார்."

"இந்தத் தரும கைங்கரியத்தையும் செய்துவிட்டார், பார்த்தாயா?"

மாணிக்கம் மாமா மறுமுறை முகத்தைக் கழுவித் துணியால் துடைத்துக்கொண்டு எதிரே பார்த்தார். நீல வானை வெட்டி மறைத்துக்கொண்டு குன்று கறுப்பு வெளிச்சமாக மேகமின்றி நின்று கொண்டிருந்தது.

"ஏன் தம்பி, இந்தக் கொல்லையிலிருந்து பார்த்தால் இந்த ஊர்க்குன்று மகாலிங்கம் மாதிரி நன்றாகத்தெரிகிறதே —இதற்கு முந்தி நான் பார்த்ததில்லையே!"

தம்பிக்கு வந்தது வருத்தமா, கோபமா என்று தெரிய வில்லை.

"மாமா உங்களுக்கு எதுவும் தெரியாது. எல்லாம் விளங்கும். அந்தக் கோயில் சுவரின் ஈசான மூலையிலே ஒரு திறப்பு இருக்கிறதே, தெரியாதா? அது வழியாக யானைக்குட்டி வெளியே வரலாமே."

"திறப்பு இருக்கிறதா? தெரியாதே!" என்று மாமா மௌனமானார்.

"மாமா, உங்களுக்குப் பசி. மூளை சரியாக இல்லை. இருக்கிற திறப்புத் தெரியவில்லை. இல்லாத மகாலிங்கம் கொல்லையிலே தெரிகிறது. உங்களுக்கு எதை சொல்கிறது?"

கோபுரம் ஏறியது வீண் பிரயாசை என்று அறிந்த மாணிக்கம் பலமாக ஒருதரம் சிரித்தார்.

"மனமும் ஓர் ஏணிதான். அதன் வழியே ஏறவும் ஏறலாம்; இறங்கவும் இறங்கலாம்" என்று மாணிக்கம் மாமா சொன்னதைத் தம்பி புரிந்து கொள்ளவில்லை; பொருட்படுத்தவும் இல்லை.

"தமாஷ் இருக்கட்டும். சாப்பிடுவோம்" என்று உள்ளே நுழைந்தான் தம்பி. மாணிக்கமும் பின் தொடர்ந்தார்.